Registered as a News Paper in Sri Lanka — கங்கணம்: 04 விலை ரூபா: 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 மார்ச் (18 - 03 - 1991) திங்கட்கிழமை ஓசை 28

## புலமைப்பரிசில்பரீட்சைக்கு விண்ணப்பங்கள் இல்லை

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணத்தில் நடைபெற இருக்கும் விசேட 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சை நடைபெற இரண்டு வாரங்களே இருக்கின்ற போதும் திருமலை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து இதுவரை விண்ணப்பங்கள் எதுவும் வந்து சேரவில்லை என பரீட்சை ஆணையாளர் ஆர். வெலகெதர தெரிவித்துள்ளார்.

(4ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பில் கொள்ளைகள் தொடர்பாக 5 ஆயுதப் படையினர் பொலிஸாரால் கைது!

## தமிழ்க் குழுவைச் சேர்ந்தவர் தப்பி ஓட்டம்

(கொழும்பு)

கொழும்பில் ஐந்து முன்னாள் பொலிஸாரும், இராணுவத்தினரும் பல களவுக் குற்றங்களுக்காகப் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். தமிழ்க் குழுவைச் சேர்ந்தவர் தப்பி ஓடிவிட்டார்.

வெள்ளவத்தைப் பகுதியில் நகை, வாகனங்கள், மற்றும் பணம் ஆகியவற்றைத் திருடியதற்காக முன்னாள் படைவீரர் ஒருவர் கைது செய்யப்பட்டார். இவருக்கு உடந்தையாக கடற்படை, விமானப் படை முன்னாள் சிப்பாய்கள் இருவர் செயற்பட்டதாகப் பொலிஸ் விசாரணையின் போது தெரிய வந்துள்ளது. இவர்கள் கடந்த ஆறுமாத காலப்பகுதியில் கோட்டை, பம்பலப்பிட்டி, கொகுவல, தெகிவளைப் பகுதியில் பல களவுகளில் ஈடுபட்டுள்ளார்கள்.

முன்னாள் கடற்படை, விமானப்படைச் சிப்பாய்களான இருவரும் தலைமறைவாகி விட்டதாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இராணுவ புலனாய்வுத் துறையைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் நகைக் கடையொன்றில களவு எடுத்துக்கொண்டு தப்பியோட முயற்சித்தபோது புறக்கோட்டையில் வைத்துக் கைது செய்யப்பட்டார். இவர் வழங்கிய தகவலைத் தொடர்ந்தே மேற்படி ஐந்து பேரும் கைதுசெய்யப்பட்டனர்.

புலனாய்வுத்துறை சிப்பாயைக் கைதுசெய்ய முயற்சித்த போது இவரும், இவருடன் சேர்ந்த தமிழ்க்குழு உறுப்பி

(4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### மல்கோத்ரா குமார் விமல்

(மட்டக்களப்பு)

கடந்த 13ஆம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள தன்னாமுனை சீனன்வாடியிலிருந்து புலிகள் சென்று கொண்டிருக்கும்போது இராணுவத்தினர் பதுங்கி இருந்து தாக்கிய போது மல்கோத்ரா (மட்டக்களப்பு) என்ற போராளியும் குமார் (இருதயபுரம்) என்ற ஆதரவாளரும் வீரமரணம் அடைந்தனர்.

புலிபாய்ந்தகல் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடந்த 14ஆம் திகதி இடம்பெற்ற மோதலில் விமல் (பிரபாகரன், பொத்துவில்) வீரமரணமடைந்தார்.

இந்த மூவருக்கும் விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

## வடக்கில் கூடுதல் இராணுவம் நிலைமை வழமைக்குத் திரும்பும் — ஹமில்டன் வனசிங்கா

(கொழும்பு)

"வடக்கிற்கு இராணுவத்தினர் கூடுதலாக அனுப்பப்பட்டிருப்பதால் அங்கு நிலைமைகள் வழமைக்குத் திரும்பும்" என சிறிலங்கா இராணுவத்தளபதி ஹமில்டன் வனசிங்கா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இதற்காக வடக்கில் மேலதிகமாக மூன்று இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டிருப்பதாகவும், இதனால் அங்கு நிலைமை சமூகமடையக் கூடும் என்றும் தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதே நேரம் கிழக்கிலும் பாரிய இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் தெரிவித்தார்.

## தமிழ் அகதிகள் மீது கொழும்பில் தாக்குதல்

(கொழும்பு)

கொட்டாஞ்சேனை விவேகானந்தா மேட்டில் இருக்கும் அகதி முகாமில் கடந்த ஆறாம் திகதி வாழைச்சேனையிலிருந்து வந்த தமிழ் அகதி ஒருவர் நையப்புடைக்கப் பட்டுள்ளார். இவர் நண்பகல் 1.30 மணியளவில் வெளியிலிருந்து வரும் போது அங்குநின்ற சில வெளியாரால் தாக்கப்பட்டுள்ளார்.

இதனைத் தொடர்ந்து இது போன்ற சம்பவங்கள் தொடர்வதால் கொழும்பில் அகதி முகாம்களில் இருக்கும் வடக்கு, கிழக்கு மக்கள் பாதுகாப்பற்ற நிலைக்கு தள்ளப்பட்டிருப்பதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

அகதிகளல்லாத வெளியார்களினால் அகதிகள் தாக்குத

(4ஆம் பக்கம் பார்க்க)

## நிலாவெளி பஸ் நிலையத்தில கண்ணிவெடித் தாக்குதல்

(திருமலை)

நிலாவெளி பேருந்து நிலையத்தில் நின்ற இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகளால் கண்ணிவெடித் தாக்குதல்மேற் கொள்ளப்பட்டது.

கடந்த 17ஆம் திகதி காலை பத்து மணியளவில் இடம் பெற்ற இத்தாக்குதலின் சேத விபரம் எதுவும் தெரியவரவில்லை.

## நெடுந்தீவு, வடமராட்சி கிழக்கு ஊழியருக்கும் 10 ஏக்கர் நிலம்

(கொழும்பு)

நாட்டின் கஷ்டப் பிரதேசங்களில் பணியாற்றும் அரச ஊழியர்கள் விவசாயம்செய்ய அல்லது வீடு கட்டிக் குடியிருக்க 10 ஏக்கர் காணியை வழங்குவதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி வடமாகாணத்தில் யாழ். மாவட்டத்தில் உள்ள நெடுந்தீவு, வடமராட்சி கிழக்கு, தென்தீவுப் பகுதியிலும், மன்னார் மாவட்டத்தில் மடு, முசலி, மாந்தை மேற்கு, நானாட்டான் பகுதிகளிலும், வவுனியா மாவட்டத்தில் நெடுங்கேணியிலும், கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரியிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் பாண்டியன்குளம், துணுக்காய்ப் பகுதி

(4ஆம் பக்கம் பார்க்க)

## சிலாவத்துறையில் புலிகள் இராணுவம் மீது தாக்கு; சிப்பாயின் சடலம் மீட்பு!

(மன்னார்)

சிலாவத்துறை இராணுவ முகாமில் இருந்த இராணுவத்தினர் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் இரண்டு ஹெலிக்கொப்டர்கள் ஆகியவற்றின் உதவியுடன் வெளியேற முற்பட்ட இராணுவத்துடன் அந்தமுகாமிலிருந்து எழுநூறு யார் தொலைவில் நின்று எதிர் தாக்குதல் நடத்தியதில் இராணுவத்தினர் முகாமிற்குள் ஓடிவிட்டனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## சமூக விடுதலைக்கான வேலைத் திட்டத்தில் தீவிர ஈடுபாடு கொண்ட மேஜர் செங்கதிர்

வன்னிப் பிராந்தியத்தில் ஒரு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருந்த தலைமைச் செயலகப் பிரசாரப் பொறுப்பாளர் செங்கதிர் அவர்கள் வவுனியா இராணுவ முகாம் அருகே வழி தவறி இராணுவத்தின் நிலைகளுக்குள்ளே சென்றதனால் எதிரியின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வீரமரணமடைந்துள்ளார் என விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைமைச் செயலகம் விடுத்த அறிக்கை தெரிவித்துள்ளது.

32 வயதுடைய 3 பிள்ளைகளின் தந்தையான மேஜர் செங்கதிர் (நடேசு இரஞ்சித வரதராசா) 1984ஆம் ஆண்டு தலைவைப் புலிகள் இயக்கத்துடன் இணைத்துக்கொண்டிருந்தார்.

தமிழீழ - இந்தியப் போரின் போது வடமராட்சிப் பகுதியிலேயே நின்று போராட்ட வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்.

பின்னர் புலிகளின் அரசியற் கட்சியான விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி உதயமான வேளை அதன்துணை அமைப்பாளராகச் செங்கதிர் விளங்கினார்.

ஒரு சிறந்த பேச்சாளராகவும் அரேசமயம் கலைஞராகவும் இருந்த மேஜர் செங்கதிர் தலைமைச் செயலகத்தின் பிரசாரப் பொறுப்பாளராகவும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## பலாலி இராணுவத்தின் முயற்சி முறியடிப்பு

(வலலாய்)

பலாலி இராணுவ முகாமிலிருந்து வலலாய் பக்கமாக நேற்று முன்தினம் இரண்டு முறை சிறிலங்கா இராணுவத்தினர் வெளியேறமுற்பட்டனர். காலை ஆறு மணியளவில் வெளியேற முற்பட்டபோது நடத்தப்பட்ட எதிர்த் தாக்குதலுடன் ஏழுமணி பத்து நிமிடம் அளவில் முகாம் திரும்பினர்.

இதனைத் தொடர்ந்து திரும்பவும் மதியம் ஒருமணியளவில் வெளியேற முற்பட்ட போது தொடுக்கப்பட்ட எதிர்த்தாக்குதலுடன் ஒன்று முப்பதுக்கு பின்வாங்கினர்.

## மட்டக்களப்பு

## டிப்போ அத்தியட்சகர் இராணுவ விசாரணையில்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு இ. போ. ச. டிப்போ அத்தியட்சகர் கடந்த செவ்வாயன்று மாலை படையினரால் விசாரணைக்கென அழைத்துச்செல்லப்பட்டுள்ளார். இந்தச் சம்பவத்தை ஆட்சேபித்து இ. போ. ச. ஊழியர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதால் மட்டக்களப்பு மாவட்டத்தில் இ. போ. ச.

(4ஆம் பக்கம் பார்க்க)

## மூவர் தற்கொலை முயற்சி

(செ. தா. மை.)

யாழ். ஆஸ்பத்திரியில் தற்கொலைமுயற்சி மேற்கொண்ட மூவர் நேற்று ஆபத்தான நிலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**ஆங்கில கல்வி**

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் சகல தரப்பினருக்கும் ஆங்கிலம் ஆரம்ப அறிவிலிருந்து தனிப் பட்ட முறையிலும் உங்கள் வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப் படும் நேரில் அல்லது கடித மூலம் தொடர்பு கொள்ளவும் S ஜெயராஜா C/o S. சந்த்ரநந்தம் இராமசேவை உத்தியோகத்தர், உடுவில் உடுவில் மகளிர் பாடசாலைக்கு முன்பாக) (R-1154)

## இசைக் கருவிகள் தேவை

மிருதங்கம், வயலின் வீணை தம்புரா ஆர் மோனியம், சுருதிப்பெட்டி உட்பட அனைத்து இசைக் கருவிகளும் நியாய விலைக்கு தேவைப்படு கின்றது சைவசமுன் னோர் கீழ்க்கண்ட முகவரியுடன் உடன் தொடர்பு கொள்ளவும்.

கோ. சிறிஸ்கந்தராசா
141, பருத்தித்துறை வீதி,
நல்லூர்
யாழ்ப்பாணம்.
(B 2161)



# UNIVERSITY OF JAFFNA SRI LANKA

Applications will be received by me from suitable candidates for the following post upto *1991-04-02*

**POST: SUB WARDEN (FULL TIME) (FEMALE) ON CONTRACT**

**AGE: Not more than 40 Years**

**SALARY SCALE: Rs. 4000/- p m (Fixed)**

Application forms and particulars for the above post should be obtained from the Office of the Senior Assistant Registrar / Establishments of this University.

Request for application froms for the above post should be accompanied by a self - addressed stamped envelope of *23x10* c. m. in size.

**REGISTRAR**
University of Jaffna,
Thirunelvely,
Jaffna.
*1991-3-14*

*(B/ 2164)*



# க. பொ. த. சாதாரண தரம்
# PRACTICE EXAM
# பயிற்சிப் பரீட்சை

1990 Dec. இல் நடைபெற்ற க. பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குரிய மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை நடைபெறவுள்ளது.

- யாழ். குடாநாட்டின் எப்பகுதியில் இருந்தும் மாணவர்கள் இப்பரீட்சைக்கு தோற்றலாம். ஆனால் பரீட்சை நிலையங்கள் யாழ். மாநகர சபை எல்லையினுள்ளேயே அமையும்.
- யாழ். மாநகரசபை எல்லை தவிர்ந்த குடாநாட்டில் வேறு பகுதிகளில் பரீட்சை நிலையங்களை அமைக்க விரும்பும் நிறுவனங்கள் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்புகொண்டு அதற்கான ஒழுங்குசெய்யலாம்.
- கணிதம், விஞ்ஞானம், சமூகக் கல்வி, ஆங்கிலம், தமிழ் ஆகிய ஐந்து பாடங்களில் மட்டுமே இப்பரீட்சை நடைபெறும்.
- 20—03—1991 இற்கு முன்னர் கீழே குறிப்பிடப்பட்ட முகவரியில் விண்ணப்பப் படிவத்தைப் பெற்று பூர்த்திசெய்து பரீட்சைக் கட்டணமாக ரூபா 50-00 செலுத்துதல் வேண்டும். தாமதமாக வரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- பரீட்சைக்கான நேர அட்டவணை, சுட்டெண், பரீட்சை நிலையம் போன்ற விபரங்கள் அடங்கிய அனுமதி அட்டை மாணவர்களுக்கு பின்னர் அனுப்பி வைக்கப்படும்.
- தகுதி அடிப்படையில் பரிசுகள் வழங்கப்படும். ஐந்து பாடத்துக்குமுரிய மொத்தப் புள்ளிகளில் அதிகூடுதலான கூட்டுத்தொகையை பெறுபவருக்கு தங்கப் பதக்கமும், ஒவ்வொரு பாடங்களிலும் கூடுதலான புள்ளியைப் பெறுபவர்களுக்கு விசேட பரிசில்களும் வழங்கப்படும்.

## Examination Unit
## UNIVERSAL
**Kantharmadam, JAFFNA.**

★★பரீட்சை மேற்பார்வையாளர்களாக, வினாத்தாள் திருத்துபவர்களாக கடமையாற்ற விரும்பும் ஆசிரியர்கள் இத்துறையில் தமது அனுபவம், தகைமை போன்றவற்றைக் குறிப்பிட்டு 20. 03. 1991 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

(B 2189)



# படமாடம்

உங்களுக்குத் தேவையான படவகைகளைப் பெற்றுக்கொள்ளவும், படங்களுக்குச் சட்டமிடவும், கண்ணாடி வகைகளை விரும்பிய அளவில் குறைந்த விலையில் பெற்றுக் கொள்வதற்கும் யாழ்நகரில் நீங்கள் நாட வேண்டிய முன்னணி நிலையம்:

**படமாடம்**
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்:
(மக்கள் வங்கிக்கருகாமையில்)
B2131



# வெற்றிடம்

ஒரு நிறுவனத்திற்கு பின்வரும் பதவி வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பண்டகசாலைப் பொறுப்பாளர்.
   ஐந்து வருடங்களுக்கு குறையாத அனுபவம் இருக்க வேண்டும்.
2. தமிழ் சுருக்கெழுத்தாளர்/ தட்டெழுத்தாளர்
3. கணக்குலிகிதர்கள்.
4. நிருவாக அலுவலர் (Administative Officer)
5. புள்ளிவிபரவியலாளர்.
   புள்ளிவிபரவியல் பட்டதாரியும் போதிய அனுபவமும் வேண்டும்.

**வேதனம்:** தகுதிக்கேற்ப வழங்கப்படும்.

**வயது:** 25 - 50க்குமிடைப்பட்டதாக இருக்க வேண்டும்

**விண்ணப்பங்கள்;**

மே/பா ஈழநாதம்
இல: 31 மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரிக்கு 23. 03. 1991 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.

தமிழீழ ஆய்வு நிறுவனம்
மையப் பணியகம்
தமிழீழம்

(B-2152)





## மார்ச் 18

1985ஆம் ஆண்டு கல்முனையில் சிறிலங்கா இரகசியப் பொலிசாரின் சுற்றிவளைப்பின் போது ஏற்பட்ட மோதலின் பின் சயனைட் அருந்தி வீரமரணமடைந்த

**வில்வம்** (முத்துவேல் கருணாநிதி - கல்முனை - 2)

1988ஆம் ஆண்டு தேசவிரோத சக்திகளினால் படுகொலை செய்யப்பட்ட

**ரமணன்** (கணபதிப்பிள்ளை இலட்சுமணன் - பொத்துவில்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

மாவீரர்களே!
நீங்கள் சிந்திய இரத்தம்
எங்கள் இதயத்தில்
எழுத்துக்களாய் படிந்தது
நீங்கள் நடந்த பாதைகளில்
எங்கள் பாதங்களின் பயணம்
ஏக்கங்களுக்கு விடிவுகாண
ஏந்திய ஆயுதங்கள்
எதிரிகளை விரட்டி
எம் மண்ணை விடுவிக்கும்,
அந் நாளில்
உங்கள் கனவு நனவாகும்.

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B-2148)

### ✹ சிந்தனைக்கு ✹

தீர்வு என்பது இறுதியில் வருவது!
இடைக்காலஓய்வும் ஆறுதலும் தீர்வாக அமையாது

— தொமஸ் ஒபர் சன்


# ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 18-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த. பெ. எண் 05


## இந்தியத் தூதருக்கும் பொழுதுபோக வேண்டும்

இலங்கைத்தமிழரின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பாக தமிழ்ப் பிரதேசங்களுக்கு வெளியில் வாழும் தமிழ்க் குழுக்களுடன் சிறிலங்காவிற்கான இந்தியத் தூதுவர் என். எம். ஜா இரண்டு தினங்கள் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அப்பேச்சுவார்த்தைகளின் முடிவுகள் முஸ்லிம் குழுக்களுக்கும் கருத்துப்பரிமாறல்களுக்கு அனுப்பப்படும் எனவும் இந்தியத்தூதுவர் ஜா தெரிவித்துள்ளார்.

ஏறத்தாழ இதை ஒத்த ஒரு நடவடிக்கையே கடந்த வருடம் விடுதலைப்புலிகளுடன் மோதல் தொடங்கியவுடன் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவும் மேற்கொண்டார். சர்வகட்சி மகாநாடு என்ற ரீதியில் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் பல மாதங்கள் இழுபட்டனவே தவிர உருப்படியான முடிவு எதையும் காணவில்லை. தற்பொழுது சிறிலங்கா அரசாங்கம் பெரிதாக இதுபற்றிச் சிந்திப்பதாகவும் இல்லை.

இலங்கைத்தமிழரின் தேசிய இனப்பிரச்சினை பற்றி இந்தியாவிற்கு நீண்டதொரு அனுபவம் உண்டு சிறிலங்கா அரசாங்கத்திற்கு கிடைத்துள்ள அனுபவமும் இந்தியாவால் உணரக் கூடியதாக இருந்திருக்கும். இவை யாவற்றிற்கும் மேலாக இருவாரங்களுக்குமுன்னர் இந்திய வெளியுறவுச் செயலாளர் முஸ்குந்தேபே, தமிழ் மக்களின் பெரும்பான்மை ஆதரவு விடுதலைப் புலிகளுக்கு உள்ளது என இந்தியா ஏற்றுக்கொண்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் இந்தியத்தூதுவர் கொழும்பில் உள்ள தமிழ்க் குழுக்களுடன் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளமை தமிழர் தேசியவிவகாரத்தில் தனது கரிசனை உள்ளது என்பதை வெளிக்காட்டும் முயற்சியேயன்றி வேறொன்றும் இல்லை இம்முயற்சி இந்திய தூதரின் காலத்தை வியமாக்குமே தவிர பயன் எதும் ஏற்படப்போவதில்லை.

1989இல் விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் என்பதை ஏற்றுக்கொண்டு சிறிலங்கா அரசாங்கம் விடுதலை புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியது. இந்திய இராணுவத்தை வெளியேற்ற சிறிலங்கா அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் மேற்கொண்ட ராஜதந்திர நடவடிக்கையாக இது விமர்சிக்கப்பட்டாலும், விடுதலைப்புலிகள்தான் தமிழரின் ஏக பிரதிநிதிகள் என சிறிலங்காவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை மறுக்கமுடியாது.

இதனைக்கடந்த கால வரலாறும் தெளிவாக காட்டியுள்ளது. விடுதலைப்புலிகளைத் தமிழர் பிரதேசங்களில் இருந்து விரட்ட இருவருடங்களாக இந்திய இராணுவம் முயற்சித்தது. இதேபோல சிறிலங்கா இராணுவமும் பல முடம் முயற்சித்தது. முயற்சித்தும் வருகின்றது. இவர்கள் இருவருடனும் சேர்ந்து பல தமிழ்க்குழுக்களும் முயற்சித்தன. ஆனால் எவரின் முயற்சியும் வெற்றி பெறவில்லை - புலிகளை விரட்டவும் முடியவில்லை, அழிக்கவும் முடியவில்லை. இதற்கு தமிழ் மக்கள் மத்தியில் புலிகள் பெற்றுள்ள செல்வாக்கும், அவர்கள் தமது கொள்கையிலும் கொண்டுள்ள தளம்பாத நிலையுமே காரணமாகும்.

இந்த நிலையில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது விடுதலைப்புலிகளைத்தவிர்த்து ஏற்படுத்தக் கூடியதல்ல. இதனை இந்தியாவும் சிறிலங்காவும் தெளிவாக உணர்ந்தும் உள்ளன. ஆனால், விடுதலைப் புலிகளை அங்கீகரிக்காமையும், அவர்களுடன் பிரச்சினையை தீர்க்க முற்படாமையும் இவ்விரு நாடுகளும் பிரச்சினைத் தீர்வில் அக்கறை இல்லை என்பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

## நிறுவை அளவையில் குற்றம் ஊழியர் இடை நிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

நிறுவை அளவையில் குற்றம் புரிந்த காரணத்திற்காக உடுப்பிட்டி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் ஒரு கிளையின் முகாமையாளரும் நிறுவை அளவாளரும் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குற்றத்தை கண்டுபிடித்த யாழ் செயலக விலைக்கட்டுப்பாட்டு மற்றும் முத்திரையிடும் பிரிவு அதிகாரிகள் தகவல் தருகையில் இத்தகைய குற்றங்களைக் கண்டுபிடிப்பதில் தாம் இப்பொழுது இரகசிய வேலைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் கண்டுபிடித்த குற்றவாளிகளை உடனடியாக அவர்களின் மேலிடத்துக்கு அறிவித்து பெருந்தொகைப் பணத்தை தண்டமாக பெற்றுக்கொள்வதுடன் தற்காலிகமாக அவர்களை வேலையில் இருந்து நீக்கவும் வழிவகை செய்வதாக கூறினார். (வோ)

## ரூ200 கோடி உதவி

(கொழும்பு)


இலங்கையின் கடற்றொழில் அபிவிருத்திக்காக ஆசிய அபிவிருத்தி வங்கி 200 கோடி ரூபாவினை வழங்கியுள்ளது.

## எரித்திரியா :-

### சுருக்கமான வரலாறு

எரித்திரியா:- இதன் வடக்கு மேற்கு எல்லையாக சூடானும், தெற்கு எல்லையாக எத்தியோப்பியாவும், கிழக்கு எல்லையாக செங்கடலும் உள்ளன. 124,000 ச. கி. மீ. பரப்பளவையும் (கிட்டத்தட்ட இங்கிலாந்தின் அளவு) 9 மெ ழிப்பிரிவைக் கொண்ட 34 இலட்சம் மக்களையும் கொண்ட இந்த பகுதியில் 50 வீதம் மக்கள் முஸ்லிம்மக்கள். 50 வீதம் கிறிஸ்தவர்களாகும்.

1941 வரை, எரித்திரியா இத்தாலியின் காலனியாக இருந்தது 2ஆம் உலக யுத்தத்தில் இத்தாலியின் வீழ்ச்சியுடன் எரித்திரியா, எத்தியோப்பியா இரண்டும் பிரித்தானிய இராணுவ நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. 1950ஆம் ஆண்டில் எரித்திரியர்களின் சம்மதம் இன்றியே எரித்திரியா எத்தியோப்பியாவுடன் இணைக்கப்பட்டது சோவியத் ருஸ்யாவின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது ஐ. நா. சபை இத்தீர்மானத்தை நிறைவேற்றியது.




## ஒரு வரலாற்றுப் படிப்பினை

...ற சூடானுக்கும் எத்தியோப்பியாவுக்கும் இடையே ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

எரித்திரியா பல தோல்விகளைச் சந்தித்தது. 1981இல் ஏற்படுத்தப்பட்ட பெரும் பஞ்சத்தால் எரித்திரிய மக்கள் சூடானுக்கு இடம் பெயர்ந்தனர், ஆயினும் எரித்திரியா அடிமைப்படாமல் தனது விடுதலை யுத்தத்தை தன்னை இணைத்துக் கொண்டது. ஆனால் தன்னுடைய அகன்றஎத்தியோப்பியா அவாவில் இருந்தோ இனவாதக் கோட்பாட்டில் இருந்தோ அவர்கள் தம்மை விடுவித்துக் கொள்ளவில்லை. இதுதான் எரித்திரியாவை அடக்குவதற்கான போராட்டத்தை மீண்டும் தொடங்கியதற்கான காரணமாகும். அதேபோல் சோவியத் ருஷ்யாவைப் பொறுத்தவரையில் அமெரிக்க இராணுவ நிலையான எத்தியோப்பியாவை தனது இராணுவ நிலையாக மாற்ற வேண்டியதே அதன் நோக்கமாய் இருந்தது. இதனால் எத்தியோப்பியாவின் இனவாதத்திற்கு அது துணைபோனது.



போர்க்களமொன்றில் எரித்திரிய EPLF போராளிகள்

1958 இல் எரித்திரியா விடுதலை முன்னணி தோற்றுவிக்கப்பட்டது. அது எரித்திரியாவை 5 மாகாணங்களாக பிரித்து. விடுதலைக்காக போராடிக்கொண்டிருந்த வேளையில், எத்தியோப்பியா எரித்திரியாவை தனது 14வது மாகாணமாக இணைத்துக் கொண்டது. 1970இல் எரித்திரியா விடுதலை முன்னணியில் இருந்து பிரிந்து, எரித்திரியா மக்கள் விடுதலை முன்னணி உருவானது,

1974 வரை. அமெரிக்க சார்பு ஆட்சியே, எத்தியோப்பியாவை ஆண்டுவந்தது இதனால், சோவியத் யூனியனும் கியூபாவும் எரித்திரியா விடுதலைப் போராட்டத்திற்கு போதியளவு உதவிகள் செய்து வந்தன.

1974இல் சோவியத் சார்பு அரசாங்கம் எத்தியோப்பியாவின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றாலும் கூட எரித்திரியா விடுதலைப் போராட்டம் முற்றுப் பெறவில்லை. 1977 இல் இருவிடுதலை முன்னணிகளும் எரித்திரியா முழுவதையும் கைப்பற்றிக் கொண்டன. 'ஒகடான்' பாலைவனத்திற்காக எத்தியோப்பியாவும், சோமாலியாவும் தமக்குள் பலமாக மோதிக்கொண்டது எரித்திரியாவுக்கு சாதகமாக அமைந்தது. சோமாலியாவுடனான யுத்தத்தில் எத்தியோப்பியா வெற்றிபெற்றது. வெற்றிபெற்ற எத்தியோப்பியா தனது கவனத்தை எரித்திரியாவின் மீது திருப்பியது. 1978 இல் 1 லட்சம் எத்தியோப்பிய துருப்புகள், 4000 கியூப 850 ருஸ்ய இராணுவ நிபுணர்களுடனும் எரித்திரியா வைத் தாக்கத் தொடங்கின. இக்கட்டத்தில் சூடான் கரையோரப் பிரதேசத்தில் உள்ள எரித்திரியாதளங்களை அக... தொடர்கிறது.

1958 இல் இருந்து 1977 வரை, சோவியத் யூனியனையும் அதன் நேச நாடுகளையும் சார்ந்தே எரித்திரியா விடுதலைப் போராட்டம் முன்னேறி வந்தது. அவர்களின் உதவி நிறுத்தப்பட்டது மாத்திரமல்ல, அவர்களும் எத்தியோப்பியாவுடன் சேர்ந்து கொண்டதே எரித்திரியாவின் தோல்விக்கான காரணமாகும்.

### படிப்பினை - 2

சோசலிஷ முகாமுடன் தன்னை இணைத்துக் கொண்டதுடன் சோஷலிஷ கருத்துக்களைத் தழுவிக் கொண்டதாகவும் கூறும் எத்தியோப்பியா அரசாங்கம் எதற்காக எரித்திரியாவுக்கு எதிராக ஒரு யுத்தத்தை தொடங்கியது என்பது எமது அடுத்த கேள்வியாகும். எத்தியோப்பியாவின் மன்னராட்சியை ஒழிப்பதிலும் ஏகபோக நிலவுடைமை முறையை அழிப்பதிலும், சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து எத்தியோப்பியாவை மீட்டுக் கொள்வதிலும் எத்தியோப்பியாவின் புதிய ஆட்சி சோஷலிசக் கொள்கைகளைக் கடைப் பிடித்தது, இதற்காக சோசலிஷ முகாமுடன் தன்னை இணைத்துக் கொண்டது. ஆனால் தன்னுடைய...

பொறுத்த சிங்கள இனவாதத்தை விமர்சிக்காத, அதை சிங்கள மக்கள் மத்தியில் இருந்து தூக்கியெறிய அடிமுயற்சி எடுக்காத எந்த ஒரு சிங்கள சோசலிஷ கட்சியும் நம்பகரமான நட்பு சக்திகளாகவோ, தமிழ் ஈழத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பவர்களாகவோ இருக்க மாட்டார்கள் என்பதே நாம் கற்றுக்கொள்ளும் இரண்டாவது படிப்பினையாகும்.

### படிப்பினை - 3

1981 இல் தோல்வியைச் சந்தித்த எரித்திரிய விடுதலைப் போராட்டம் முற்றாக அழிந்து விடவில்லை. எரித்திரிய விடுதலையானது அந்நாட்டு மக்களின் இயற்கையான தேவையாக இருந்ததனாலும், யாருக்கும் அடிமைப்பட்டு வாழ அவர்கள் விரும்பாததனாலும் அவர்களின் போராட்டம் நிரந்தர தோல்வியைச் சந்திக்கவில்லை. தமது சொந்த மக்களின் சக்தியை அவர்களே திரட்டி எடுப்பதில் வெற்றி கண்டார்கள். ஒரு சகாப்தத்துள் அவர்கள் மீண்டும் தம்மை சுதாகரித்துக் கொண்டு, இன்று மீண்டும் நகரத்துள் எதிரியின் இராணுவத்தைச் செயலிழக்கச் செய்யும் அளவிற்கு முன்னேறியுள்ளார்கள்.

எந்த நிலையிலும் எவருக்கும் அடிமைப்பட்டு வாழ மாட்டோம் என்பதில் விடுதலை இயக்கமும், மக்களும் உறுதியாக இருப்பார்களானால் அவர்களால் தமது தோல்வியை சுதாகரித்து மிகவிரைவில் வெற்றியை நோக்கி முன்னேற முடியும் என்பதை இதுபோதிக்கின்றது.

நன்றி: தமிழீழம்

## வங்கி ஊழியர்களின் முயற்சி பயன் அளிக்கவில்லை

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு மக்கள் வங்கியை மீண்டும் செயற்படுத்துவதற்காக இந்த ஊழியர்கள் வவுனியாவுக்குச் சென்று உரியவர்களுடன் கதைத்து முயற்சித்த போதும் அவர்கள் அனைவரும் மீண்டும் இயங்கும்போது அறிவிக்கிறோம் என்று கூறி முல்லை மாவட்டத்திற்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இதனால் புதுக்குடியிருப்பில் மக்கள் வங்கிச் செயற்பாடுகள் அனைத்தும் செயலிழந்து காணப்படுகின்றன. எனவே முல்லை மாவட்ட மக்கள் பணப்புழக்க தட்டுப்பாட்டை எந்த வகையிலும் நிவர்த்தி செய்யமுடியாமல் தவிக்கின்றனர்.

தேசிய முன்னணி கலைவர்கள் கூட்டத்தில்

# அரசியல் யாப்பின் 356 பிரிவை அகற்ற தி.மு.க. வற்புறுத்தும்

-கருணாநிதி

(சென்னை)

டில்லியில் நாளை நடைபெறவிருக்கும் தேசிய முன்னணித் தலைவர்கள் கூட்டத்தில், மாநில அமைச்சரவைகளை அகற்றும் அதிகாரத்தை வழங்கும் இந்திய யாப்பின் 356-ஆவது பிரிவை முற்றிலும் அகற்றவோ அல்லது மற்றியமைக்கவோ திராவிட முன்னேற்றக்கழகம் வலியுறுத்தும் என்று அக்கட்சியின் தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான மு. கருணாநிதி சென்னையில் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

வரும் மக்கள் அவை, மற்றும் சட்ட மன்றத் தேர்தல்களில் தெகுதி உடன்பாடு காண தமது கட்சி ஜனதா தள் உட்பட இதர சாதிக்கட்சிகளுடன் பேச்சு நடத்துவதாகத் தெரிவித்தார்.

டில்லியில் இன்று நடைபெறும் தேசிய முன்னணிக் கூட்டத்தில் கலந்துகொள்ள நேற்றுக் கருணாநிதி டில்லி பயணமானார்.

## இரு மத்திய அரசாங்கங்களுமே உறுதிப்பாடின்மைக்குப்பொறுப்பு

- ராஜீவ்

(போபால்)

''மத்திய அரசாங்கத்தில் அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த இரண்டு அரசாங்கங்களே இந்தியாவின் உறுதிப்பாடின்மைக்கு பொறுப்பாகும் என்று இந்திரா காங்கிரஸ் தலைவர் ராஜீவ்காந்தி தெரிவித்துள்ளார்.

போபாலில்நேற்று செய்தியாளர்கள்மத்தியில் பேசியராஜீவ் காந்தி அரசாங்கத்தின் தவறான கொள்கைகளே அவசிய பண்டங்களின் விலையேற்றத்திற்கு காரணமாகும் என்றும் குறிப்பிட்டார்.

ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், அசாம் ஆகிய இடங்களில் நிலவும் இப்போதைய பதற்றத்திற்கும் மத்திய அரசாங்கமே காரணமாகும் என்று குறிப்பிட்டார்.

## யானை தாக்கி இளம் பெண் காயம்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி உடையார்கட்டு பகுதியில யானைதாக்கியதால் பெண்மணி ஒருவர்படுகாயமடைந்தார்.

அதிகாலை வீட்டில் வைக்கப்பட்டிருந்த நெற்குடில் நிர்மூல நாசம் செய்துகொண்டிருந்த யானையை துரத்த முயற்சித்த ரி. அற்புதமலர் என்ற நாற்பது வயது பெண்மணியை அந்த யானை தூக்கி எறிந்ததில் பெண்மணி படுகாயமடைந்தார். இவர்கிளிநொச்சிமூங்கிலாறு உடையார்கட்டிலிருந்து நேற்று மாலை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். (லோ)

5 ஆயுதப்

னர் ஒருவரும் பொலிஸை நோக்கித் துப்பாக்கிப்பிரயோகம் செய்துள்ளனர். தமிழ்க் குழு உறுப்பினர் பொலிஸ் பிடியில் சிக்காமல் தப்பிவிட்டார். இவரைத்தேடி பொலிஸ் வலை விரித்திருக்கிறது

புலமைப்பரிசில்

விண்ணப்ப இறுதி முடிவடையும் நாள் 15ஆம் திகதியாக இருந்தது. இந்தத் திகதிக்கு முன்னர் கடக்கு கிழக்கு மாகாணத்தில் பலபகுதிகளில் இருந்தும் விண்ணப்பங்கள் வந்துள்ளன

மேற்குறிப்பிட்ட மூன்று மாகாணங்களில் இருந்து விண்ணப்பங்களை நாம் இன்னமும் எதிர்பார்த்திருக்கிறோம் என்றும் ஆணையாளர் தெரிவித்தார்.

## நஞ்சூட்டல்;வீட்டிற்குதீயிடல் சம்பந்தமாக பெண் கைது

(வேலணை)

வேலணை சாட்டி என்ற இடத்தில் நடந்த கொலைச் சம்பவமொன்றில் ஈடுபட்டதாகவும் தற்பொழுது வீடொன்றை தீயிட்டுக் கொளுத்திய இருகுற்றங்களையும் செய்ததாக கூறப்படும் பெண் ஒருத்தியை தமிழ் ஈழவிடுதலைப் புலிகள் தீவிர விசாரணையின் பின் கைது செய்துள்ளனர்.

விசாரணையின்போது இப்பெண் சென்ற வருடம் திரு. சடையன் கதிரவேலு என்பவரின் உணவில் நஞ்சூட்டி அவரை கொலை செய்வதற்கு உடந்தையாக தான் இருந்ததாகவும், தற்பொழுது அவரின் வீட்டையும் தீயிட்டுக் கொளுத்தியது தானே என்றும் ஒப்புக் கொண்டுள்ளார்.

மேலும் இறந்த கதிரவேலுவின் மனைவியும் சென்ற மாதம் பழையசோற்றில் நஞ்சூட்டப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் இவரது மரண கொலை சம்பந்தமாகவும் விசாரணைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. (14)

## தங்கப்பதக்கம் வழங்கி கௌரவிப்பு



யாழ் மத்திய கல்லூரியின் உப அதிபராகவும், அதிபராகவும் கடந்த இருபது வருடங்களாகச் சேவையாற்றி கடந்த மாதம் முதல் ஒய்வு பெற்ற திரு சி. இராசேந்திரா அவர்கள் ஆற்றியசேவைகளை நினைவு கூருமுகமாகக் கல்லூரியின் அனைத்து மாணவர்களாலும் நடாத்தப்பட்ட பிரிவுபசார வைபவத்தில் அவர் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். (20)

## ஈராக்கைக் கட்டியெழுப்ப புதிய அரசாங்கம்

- சதாம்

(பாக்தாத்)

''ஈராக்கை மீண்டும் புதிதாகக் கட்டியெழுப்பப் புதிய அரசாங்கமொன்று விரைவிலேயே அமைக்கப்படும்'' என்று ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் அறிவித்துள்ளார்.

வளைகுடாப போருக்குப் பின்னர் ஈராக்கிய மக்களுக்கு முதன்முதலாக ஆற்றிய உரையில் சதாம் ஹுசைன் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

ஜனநாயகச்சீர்திருத்தத்தை ஈராக்கில் கொண்டுவருவதாகவும் சதாம் ஹுசைன் வாக்களித்தார்.

ஈராக்கின் வட பகுதியில் கிளர்ச்சிக்காரர்களுக்கும், இராணுவத்திற்குமிடையில் சண்டை நடைபெறுவதாகக் குறிப்பிட்ட சதாம் ஹுசைன் ஈராக்கின் தென் பகுதியில் நடைபெற்ற குழப்பங்கள் அடக்கப்பட்டுவிட்டன என்றும் தெரிவித்தார்.

இத்தகைய குழப்பங்களுக்கு குருடிஷ் இனத்தவரே காரணமெனவும் இதன் விளைவுகளை அவர்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்றும் எச்சரித்துள்ளார். அயல் நாடுகள் இத்தகையோருக்கு உற்சாகமளித்து நாட்டில் குழப்பத்தை ஏற்படுத்துவதாகவும் குற்றஞ்சாட்டினார்.

## கள்ளுத்தவறணை வாக்குவாதம் கத்திவெட்டில் முடிந்தது

(செ. த. மை)

கள்ளுத்தவறணையில் ஏற்பட்ட வாக்குவாதம் கத்தி வெட்டில் முடிந்தது. படுகாயமடைந்தவர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொண்டமனாறு கள்ளுத்தவறணையில் நேற்று முன்தினம் இரவுநடைபெற்றது.

கெருடாவிலைச் சேர்ந்த வ. ரஞ்சன் (30 வயது) என்பவர், 4 பிள்ளைகளின் தந்தையான பஞ்சலிங்கம் என்பவருக்குமிடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தைத் தொடர்ந்தே, ரஞ்சன் என்பவர் மற்றவரை தன்வைத்திருந்த கத்தியால் கண்டபடி வெட்டினாராம். வல்லைப்பிரதேசப்பொறுப்பாளர் சங்கிலியன் இவரைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தியுள்ளார்.

என்னை இராஜினாமா செய்ய

## கோரவும் முடியாது நான் செய்யவும் மாட்டேன்

- ஹிஸ்புல்லா

(கொழும்பு)

தற்போதைய பாராளுமன்றத்தின் முழுக்காலப்பகுதிக்குமாகவே மட்டக்களப்பு மாவட்ட வாக்காளப் பெருமக்கள் என்னைத் தெரிவு செய்தனர். இதனால் முஸ்லிம் காங்கிரஸ் அரசியல் பீடம் என்னை இராஜினாமாச் செய்யுமாறு கோரவும் முடியாது. நானும் இராஜினாமா செய்ய முடியாதுள்ளேன். இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற அங்கத்தவர் எம். எல். ஏ. எம் ஹிஸ்புல்லா முஸ்லீம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் எம். ஜே. ஏ. சஹீடுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## கத்தரிக்காயை உண்ட மூவர் மயக்கம்

(யாழ்ப்பாணம்)

இருமி நசினி அடித்த கத்தரிக்காயை சமைத்து உண்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் மயக்கமுற்ற நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் நேற்று அனுமதிக்கப்பட்டனர்.

ஊர்காவற்றுறை நாரந்தனையைச் சேர்ந்த பிரான்சிஸ் ரஜீதா (வயது 16) பிரான்சிஸ் அந்தோனிப்பிள்ளை (வயது 65) ரி அருள் சேகர் (வயது 8) ஆகியோரே இவர்களாவர். (லோ)

## விளக்கு வெடித்தது; தந்தையும் மகளும் காயம்

(யாழ்ப்பாணம்)

மாலை நேரம் வீட்டில் விளக்கேற்றி வைத்தபோது அது திடீரென கைக்குண்டு போல் வெடித்ததால் தந்தையும் மகளும் படுகாயமுற்றனர்.

கோப்பாயைச் சேர்ந்த ஐ அமிர்தலிங்கம் (வயது35) அ. அபேதா (வயது8) ஆகிய இருவரும் நேற்று மாலை யாழ். போதனா வைத்திய சாலைக்கு கொண்டு வரப்பட்டனர். அபேதாவின் நிலை படு மோசமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (லோ)

மூவர்

யாழ்ப்பாணம் அத்தியடியைச் சேர்ந்த கி. பரமானந்தன் (வயது 45) என்பவர் குடும்பத் தகராறால் கிருமி நாசினியை அருந்தினார்.

உருப்பராயைச் சேர்ந்த பொ இரத்தினம் (வயது 55) என்பவர் 3 நாட்கள் உணவின்மையால் நச்சுவிதை உண்டு தற்கொலை செய்ய முயற்சித்தாராம் இவர் ஏற்கனவே மனைவியை இழந்தவர்.

கொண்டாவில் வடக்கைச் சேர்ந்த அ. சாந்தா (வயது 23) என்பவர் தாயாருடன் ஏற்பட்ட மனக்கசப்புகாரணமாக எரிபொருளொன்றை அருந்தினாராம். இ மூவரும் அவசர சிகிச்சையின்பின் ஆபத்தான நிலையைத்தாண்டிவிட்டதாக ஆஸ்பத்திரி வட்டாரம் தெரிவித்தது.

தீவிர

இருந்து இறம்படத் தனது பொறுப்பை ஆற்றிவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

தேசிய விடுதலையுடன் கூடிய சமூக விடுதலையை இலக்காகக் கொண்ட புலிகள் இயக்கத்தின்இலட்சியத்தினை நோக்கிய வேலைத் திட்டங்களிலும், அரசியல் பிரசாரங்களிலும் மேஜர் செங்கதிர் காட்டியஈடுபாடுஅளப்பரியது

25-2 91 அன்று வவுனியாவில் வீரமரணமடைந்தமேஜர் செங்கதிருக்கும், அவருடன் வீரமரணமடைந்தசிந்து இரகுநாதன் சரவணபவனு)க்கும் எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம் எனவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது

டிப்போ

பஸ் சேவைகள் அனைத்தும் ஸ்தம்பித நிலையடைந்தன. பணிப்படை அதிகாரிகளுக்கும், ஊழியர்களுக்கும் இடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளைத்தொடர்ந்த ஊழியர்கள் கடமைக்குத் திரும்பினர்.

சிலாவத்துறை

பின்னர் அவ்விடத்திலிருந்து ஒரு இராணுவத்தின் உடல் உட்பட ஏ.கே மசின் இரண்டு ஜே. ஆர் கைக்குண்டு ஒன்று ஆகியன புலிகளால் கைப்பற்றப்பட்டன.

## உற்பத்திப் பொருள் கண்காட்சி

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குள் அடங்கும் சனசமூக நிலையங்களுக்கு மத்தியிலான உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி மானிப்பாய் இந்துக் கல்லூரியில் மூன்று தினங்கள் நடைபெற்றன. (21)

நெடுந்தீவு

களிலும் கடமைபுரியும் அரச ஊழியர்களுக்குத் தலா பத்து ஏக்கர் காணி வழங்கப்படலாம். இதற்கான நடவடிக்கைகளை உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சு மேற்கொண்டுள்ளது.

தமிழ் அகதிகள்

லுக்கு உள்ளாகி வருகின்றார்கள் தமிழனைத் தமிழர்களே நையப்புடைத்து அடக்குவது நியாயமாகுமா? என அகதி முகாம்களில் தங்கிவாழ்வோர் இந்தத் தர்பார்கள் குறித்து சிறிலங்கா அரசின் கவனத்திற்குக் கொண்டுவர முயற்சித்து வருவதாகத் தெரிகின்றது.

## மரண அறிவித்தல்

### வீரவேங்கை சிந்து

### (இரகுநாதன் - சரவணபவன்)

உடுவில் டச்றோட்டைச் சேர்ந்த இரகுநாதன் சரவணபவன் (யா-மகாஜனக் கல்லூரி-தெல்லிப்பளை) 25-02-91 திங்கட்கிழமை வீரமரணமடைந்தார். இவர் காலஞ்சென்ற இரத்தினசபேசன் இரகுநாதன் (உதவி வைத்திய அதிகாரி, கல்முனை), திருமதி லோகாம்பிகை இரகுநாதன் (ஆசிரியை யா-தமிழ் கந்தையா வித்தியாலயம், கந்தரோடை) அவர்களது ஏகபுத்திரனும் திரு திருமதி செல்லத்துரையின் பேரனும், திரு. இ. மகேஸ்வரன் (கனடா), திரு இ. சண்முகநாதன் (கனடா), திரு திருமதி இந்திரசிங்கம் (ஆசிரியர் யா-மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பளை) திரு. திருமதி சின்னையா (ஆசிரியர் யா-யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை) ஆகியோரின் பெறாமகனுமாவார். இவரது வீரமரணத்தை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

எம். ரி சின்னையா

(B/2168)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி. 81 ஆம் இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.